2-93

உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

(All Rights Reserved)

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் ருள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 3. Vol 3. | வெகுதான்யஸ்ரீ தை மீ 1உ ஜனவரி—1939 | இதழ் 10. No. 10.

திருப்புகழ்.

பழநி—(திருவாவினன்குடி)

அவனிதனி லேபி றந்து மதலையென வேத வழ்ந்து
அழகுபெற வேந டந்து இளைஞனாய்
அருமதலை யேமி குந்து குதலைமொழி யேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்
சிவகலைக ளாக மங்கள் மிகவுமறை யோது மன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்க ளாசை மிஞ்சி வெகுகவலை யாயு ழன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்
மவுனவுப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த மகதேவர்
மனமகிழ வேய ணைந்து வொருபுறம தாக வந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா
பவனிவர வேயு கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படியதிர வேந டந்த கழல்வீரா
பரமபத மாய சேந்தில் முருக னென வேயு கந்து
பழநிமலை மேல மர்ந்த பெருமாளே.

பதவுரை.

மவுன உபதேச சம்பு - (வேதாகமங்களின் முடிவாகிய அத்துவித உண்மையை வாய்திறந்து கூறாமல்) மௌனமாகவே இருந்து (கல்லாலின் கீழ் நால்வர்க்கும்) உபதேசித்தருளிய சுககாரணரும்), மதி - சந்திரனையும், அறுகு - அறுகம் புல்லையும், வேணி - கங்காநதியையும், தும்பை - தும்பை மலரையும், மணி முடியின் மீது அணிந்த மகதேவர் - அழகிய சடையின் மீது தரித்துக் கொண்டுள்ள தேவ தேவருமாகிய சிவபெருமான், மன மகிழவே அணைந்து - திருவுள்ளங் களிப்புறுமாறு கலந்து, ஒரு புறமதாக வந்த - அப்பெருமானது இடப்பாகத்தில் எழுந்தருளியுள்ளவரும், மலைமகள் - மலையரையனது திருப்புதல்வியாருமாகிய உமாதேவியாருடைய, குமார - திருக்குமாரரே !, துங்க வடிவேலா - வெற்றி பொருந்தியதும், கூர்மையுள்ளதுமாகிய வேற்படையை உடையவரே !, பவனிவரவே உகந்து - திருஉலாப் போந்தருள அன்பு கொண்டு, மயிலின் மிசையே திகழ்ந்து - மயில்வாகனத்தின் மீது (கோடி சூரிய) ஒளியுடன் வீற்றிருந்து, படி அதிரவே நடந்த - உலகம் கிடுகிடு என்று அதிருமாறு எழுந்தருளிவந்த, கழல் வீரா - வீரக் கழலையணிந்துள்ள வீரரே !, பரமபதம் ஆய செந்தில் - பூவுலக மோக்ஷமாக விளங்கும் திருச்செந்தூரில், முருகன் எனவே உகந்து - தெய்வத்தன்மையுடையவர் என்று அடியார்கள் துதிக்குமாறு எழுந்தருளியிருந்து, பழநி மலைமேல் அமர்ந்த - பழநியங்கிரிமேல் வீற்றிருந்தருளும், பெருமாளே - பெருமையின் மிக்கவரே !, அவனிதனிலே பிறந்து - பூதலத்தில் (குழந்தையாகப்) பிறந்து, மதலை எனவே தவழ்ந்து - பிள்ளைப்பருவத்தில் மெல்ல தவழ்ந்து, அழகு பெறவே நடந்து - (காண்பார் கண்கவருங்) கவினுடன் தளர்நடையிட்டு நடந்து, இளைஞோன் ஆய் - சிறிது வளர்ந்து பாலனாகி, அரு மழலையே மிகுந்து - இனிமையான (எழுத்துக்கள் நிரம்பாத) இளஞ் சொற்களையே மிகவும் பேசி, குதலை மொழியே புகன்று - கேட்பதற்கு இனிய சிறிதுதிருந்திய குதலைச் சொற்களைக் கூறி, அதிவிதமதாய் வளர்ந்து- (பெற்றோர்களால்) அநேகவிதமாக வளர்க்கப்பெற்று வளர்ந்து, பதினாறாய் - பதினாறட்டைப் பருவமடைந்த பின், சிவகலைகள் - சிவசம்பந்தமான பதி நூல்களாகிய சைவசித்தாந்த சாத்திரங்களையும், ஆகமங்கள் - சிவாகமங்களையும், மறை - வேதங்களையும், மிகவும் ஓதும் அன்பர் - நன்றாகக்கற்றுத் தெளிந்து மிகுதியாக அதனையே ஓதுகின்ற மெய்யன்பர்களுடைய, திருவடிகளே நினைந்து அறியாமல் - சிறந்த பாதங்களையே பற்றுக் கோடாக எண்ணி தோத்திரஞ் செய்யாமல், தெரிவையர்கள் ஆசை மிஞ்சி - பெண்கள் மீது மிக்க ஆசையை யுடையவனாகி, வெகு கவலையாய் உழன்று திரியும் - அவ்வாசை காரணமாக மிகுந்த வருத்தத்தையடைந்து சுற்றித்திரிகின்ற, அடியேனை உன்றன் அடி சேராய் - அடியேனைத் தேவரீருடைய திருவடியிற் சேர்த்து அருள்புரிவீர்.

பொழிப்புரை.

(ஆலின்புடையமர்ந்து அருந்தவர் நால்வர்கட்கும் ஆரண ஆகமசாரமாகிய அத்துவிதத்தின் உண்மையை) மௌன முத்திரையைக் காட்டியே நன்குவிளங்குமாறு உபதேசித்தருளியவரும் சுககாரணரும், பிறைச்சந்திரனையும், அறுகம் புல்லையும், கங்கா நதியையும், தும்பைமலரையும். அழகிய சடைமுடியின் மீது தரித்துக்கொண்டுள்ள பெரிய தேவரும் ஆகிய சிவமூர்த்தியினுடைய திருவுள்ளமானது மகிழ்ச்சி யடையுமாறு கலந்து, இடபாகத்தில் எழுந்தருளியுள்ளவரும் மலைமன்னனது திருமகளாருமாகிய உமையம்மையாருடைய திருக்குமாரரே! வெற்றியையுடையதும் கூர்மையையுடையது மாகிய வேலாயுதத்தைக் கரத்தில் தரித்தவரே! திரு உலாப் போந்தருளத் திருவுளங்கொண்டு, மரகதமயிலின்மீது ஊர்ந்து மிகுந்த ஒளியுடன் விளங்கி உலகம் அதிரும்படி எழுந்தருளிவரும் வீரக்கழலையணிந்தவீராதிவீரரே! பூதலத்தில் மோக்ஷ உலகம்போல் விளங்கும் செந்திலம்பதியில் அடியார்கள் "முருகக்கடவுளே" என்று வணங்கி உய்யுமாறு விருப்பத்தோடு, பழநி மலையின்மேல் எழுந்தருளியுள்ள பெருமையின் மிக்கவரே! மண்ணுலகில் (அடியேன்) பிறந்து, மதலைப் பருவத்தில் தவழ்ந்து, பாலப்பருவத்தில் இளநடையுடன் அழகாக நடந்து, இளைஞனாய், அருமையான மதலைச்சொற்கள் மிகுந்து இனிய குதலை மொழிகளையே பேசி, பதினாறும் ஆண்டு நிரம்பிய பின், சைவசமயசித்தாந்த நூல்களையும், சிவாகமங்களையும் வேதங்களையும் நன்கு உணர்ந்து ஓதுகின்ற மெய்யன்பர்களுடைய திருவடிகளை உளத்தில் நினைந்து (ஆவியீடேறும் பொருட்டு, துதிக்காமல், பெண்களின் மீது பெரிய மயக்கமும் ஆசையும் கொண்டு அதனால் மிகுந்த கவலையை யடைந்து, பெண்களையடையும் பொருட்டு (காற்றாடிபோல்) சுற்றித்திரிகின்ற அடியேனைத் தேவரீரது திருவடித்தாமரைகளில் சேர்த்து அருள்புரிவீர்.

விரிவுரை.

பதினாறாய் :—

உலகில் மனிதனாகப்பிறந்து இனிதுவளர்ந்து பதினாறாண்டு நிறைந்தவுடன், நல்லாரோடு கூடி ஆன்மாயீடேறும் வழியை நாடி கள்ளப்புலக் குரம்பைக் கட்டழித்து மீட்டிங்கு வாராத

மெய்க்கதியையடைவதற்கு முயற்சிக்காமல் அவநெறிசென்று பாழ்படுகின்றதைக் குறித்து கருணைவடிவாம் அருணகிரிநாதர் வற்புறுத்தி உபதேசிக்கின்றனர்.

சிவகலைகள் :—

ஆன்மாக்களுடன் அநாதியேயிருந்து பதியையடையவொட்டாது மறைத்து தன்னையும் காட்டாது பிறவற்றையும் அறியவொட்டாமற்செய்யும் ஆணவமலத்தினின்று நீங்கி சிவத்தையடையும்செந்நெறியை யுணர்த்தி உயிர்க்கு உறுதியை நல்கும் பதிநூல்களே சிவகலைகளாம். அவை அடியிற்கண்ட பதினான்கு நூல்களாம்.

> உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
> பிந்திருபா உண்மை பிரகாசம்---வந்தஅருட்
> பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
> உண்மைநெறி சங்கற்ப முற்று.

திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருபஃது, உண்மைவிளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம், என்பன.

இப்பதினான்கு நூல்களை நற்குணமமைாத சற்குரு மூர்த்தியையடுத்து அவர்பால் ஓதியுணர்ந்து பொய்கண்டார் காணாப் புனிதமெனும் அத்துவித நிலையை அடைதல் வேண்டும். இந்நூல்களையே மெய்கண்டசாத்திரம் என்பர். இச்சித்தாந்த சாத்திரங்களை ஒவ்வொருவரும் படித்துப்பயன் பெறுவார்களாக.

ஆகமங்கள் :---

ஆகமம் என்பதற்கு, ஆ - பாசம், க - பசு, ம - மலநாசம் ; முப்பொருள்களை உணர்த்துவது என்பது பொருள்.

ஆ - சிவஞானம், க - மோக்ஷம், ம - மலநாசம் ; மலத்தைக் கெடுத்து மோக்ஷத்தை யருளுவது என்றும் பொருள்படும். இறைவன் திருமுகத்தினின்றும் வந்தது என்றும் பொருள்படும்.

ஆகமம், சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பாதங்களை யுடையது. "நாலாருமாகமத்தின் நூல்", என்றூர் பிறிதோரிடத்தில் ; கிரியாகாண்டம் ஞான காண்டம் என இருபிரிவுடையது ; பதி பசு பாச இலக்கணங்களைத் தெளிவாகக் கூறுவது ; சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்ரமார்க்கம், தாசமார்க்கம் என்ற நான்கு வழிகளையுடையது. இவ்வாகமம் 28 வகை ; அவை யாவன: காமிகம், யோகஜம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகச்சிரம், அஞ்சுமான், சுப்பிரபேதம், விஜயம், நிச்சுவாசம், சுவாயம்புவம், ஆக்கினேயம், வீரம், இரௌரம், மகுடம் விமலம், சந்திரஞானம், முகவிம்பம், புரோற்கீதம், இலளிதம், சித்தம், சந்தானம், சர்வோத்தம், பார்மேச்சுரம், கிரணம், வாதுளம்.

மறை :---

எல்லாப் பொருள்களையும் தன்னகத்தே கொண்டு மறைத்து வைத்திருப்பதனல் வேதத்திற்கு இப்பொருள் உண்டாயிற்று. வேதம் பொதுநூல் ; ஆகமம் சிறப்புநூல்.

ஓதும் அன்பர் திருவடிகளை நினைந்து துதியாமல்:—

வேத சிவாகம சித்தாந்த நூல்களை ஓதியுணர்ந்த நல்லன்பர்களையடுத்து அவர்களுடன் கலந்து அவர்களது திருவடித் தாமரைகளை உளத்தில் உன்னித்துதிப்பது சிவகதியடைதற்கு எளியதவநெறியாம். அவ்வன்பர்களது உதவியால் அவ்வருள் நூல்களின் உண்மை கருத்துக்களை யுணர்ந்து உய்யலாம். அவருதவியின்றி அந்நூல்களின் கருத்துக்களை யுணரமுடியாது.

தண்ணீர் விடாய் கொண்டோன் கடல்நீரைத் தான் நேரே சென்று பருகுவானேயானல் விடாய் தீருமா? மேலும் மிகுதியுறும். மேகம் சென்று கடல்நீரைப்பருகி அதனிடத்துள்ள உப்பைநீக்கி நன்னீரைத்தர, அதன் வாயிலாகவந்த நீரைக்குடிப்பவனுக்கே விடாய் நீங்கும். அதுபோல் நல்லோரை யடுக்காது தாமே சாத்திரங்களை ஓதமுயல்பவன் மனந்தெளிவடையாது மேலும் மேலும் ஐயம், விபரீதம், மயக்கம் முதலியவைகளை யடைந்து கெடுவன் ; குருவாயிலாகவே கற்றல்வேண்டும். குருநாதனகிய மேகம் வேதாகமாதி கடலில்சென்று அதைப்பருகி

அதனிடத்துள்ள ஐயவிபரீதங்களாகிய உவரைநீக்கி நல்லுணர் வாகிய நன்னீரை யருளும்.

சாத்திரத்தை ஓதினர்க்குச் சற்குருவின் தன்வசன
மாத்திரத்தே வாய்த்தவளம் வந்துறுமே---ஆர்த்தகடல்
தண்ணீர் குடித்தவர்க்குத் தாகம் தணிந்திடுமோ
தெண்ணீர்மை யாயிதனைச் செப்பு.

---திருக்களிற்றுப்படியார்.

வெகு கவலையா யுழன்று திரியும் :—

நல்லாரிணக்க மின்மையால், பெண்மயக்கமென்னும் பேய் வாய்ப்பட்டு கங்குல்பகலாகக் கறங்குபோல் திரிந்து மிகுந்த துன் பத்தையடைகின்றார்கள். ஆதலால் துன்பநீக்கத்திற்கும் இன்ப ஆக்கத்திற்கும் ஏது நல்லன்பரிணக்கமேயாம். அரிவையராசை அல்லற்கு இருப்பிடமாம்.

" அரிய பெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன் க்ருபைச் சித்த மென்று பெறுவேனோ."

மவுன உபதேச சம்பு :—

எண்ணுதற் கெட்டாக் கண்ணுதற்கடவுள், அன்றாலின் கீழிருந்து குன்றாத்தவத்தினர்க்கு, ஞானவரம் பாகிய மோனநிலை யை வாய்மலர்ந்துரையாது மௌனமாகவே சிந்முத்திரையாலேயே சகலாகமசாரமாகிய அத்துவித உண்மையை உபதேசித்தருளிய அளப்பருந்திறத்தை யாரே மதிக்கவல்லார் ?

ஒன்றெனற்குச் சுட்டு விரலினையு மோரிரண்
டென்றிடற்கஃ தோடொன் றினையுமிரண்---டொன்றுமென
ஆட்டியொன் றாக்குதலுங் காட்டாமல் அத்துவிதங்
காட்டியதே கல்லாலிற் கை,

---காசியாத்திரை.
பாம்பன்-சுவாமிகள்.

மௌனோபதேச வரலாறு.

உமாதேவியார் தக்கன் சிவாபராதியானதால் அவனால்வளர் உடம்பும் பேரும் நீங்குதற் பொருட்டு, சிவபெருமான்பால் அரு

ளும் விடையும் பெற்று மலையரையனிடம் மகளாகி வளர்ந்து சிவ மூர்த்தியைக் குறித்து தவமேற்கொண்டிருந்தனர். அக்காலையில் பிரமகுமாரர்களாகிய சநகர், சநந்தனர், சநாதனர், சனத்குமாரர் என்னும்முனிவர் நால்வரும் வேதங்களை யாராய்ந்து அதனால் மன மடங்கப் பெறாராய், பற்பல தவங்களைச் செய்து, உள்ளுவார் வினை யகற்றும் வெள்ளிமலையை யடைந்து, திருநந்திதேவரிடம் பணிந்து விடைபெற்று திருச்சந்நிதியுட்சென்று, ஆலமுண்ட நீலகண்டப் பெருமானை வணங்கி, கரமலரைசிரமிசை கூப்பி, மலைமகள்மகிழ! அருட்கடலே! ஆதிபுராதன! அநந்தவகையாகிய ஆரணப் பொருளை ஆராய்ச்சி செய்தும் அடியேங்களுடைய மனம் அலைந்து கொண்டேயிருக்கிறது. மனமடங்கி யாங்கள் கடைத்தேறும் பொருட்டு வேதங்களின் உட்கிடையாக உள்ளபொருளை உபதே சித்தருளவேண்டும். என்று விண்ணப்பஞ்செய்தனர். சிவபெரு மான் தவமுனிவர்கட்கு அருள்புரிந்து "இங்கு இருத்திர்" என்று அருள்புரிய, அவர்கள் அண்ணலாரது பொன்னடி மலரின் கீழ்த் தங்கினர்.

அந்திவண்ணர் நந்திதேவரையழைத்து, "எம்மைத் தரி சிக்க மூவர் தேவாதிகளில் யாவரெய்தினும் சந்நிதிக்குள் விடா தொழிக; மதனன் வரில்வரவிடுக" எனப்பணித்து, கயிலைமலை யில் கவினுறத்திகழும் கல்லாவின் கீழிருந்து நால்வர்கட்கும் சிவா கமங்களிற் கூறப்பட்ட பதி பசு பாசங்களாகிய முப்பொருளிலக் கணங்களை விளக்கி வெளியிட்டருளினர். சனகாதியர் "அருள் வடிவாகிய குருநாத! எங்கள் மனம் விரிந்திருப்பதால் மனமடங் கும்வகை ஞானோபதேசம் புரிந்தருளவேண்டும்" என்று வேண்ட, புரமெரித்த பரசிவனார் புன்முறுவல் பூத்து, வாய்மலர்ந் தொன்றுங் கூறாது, "அப்பொருள் இவ்வாறிருக்கும்" என்று குறிப்பாற்காட்ட, திருக்கரமொன்றனைத் திருமார்பிற் சேர்த்து சிந்முத்திரை காட்டி முனிவர்போல் ஒருகணப்பொழுது மோன நிலையில் நின்றருளினர். அதனால் அந்நால்வர்களும் மனமடங்கி ஞானநிலையுணர்ந்து பேரின்பப் பெருவெள்ளத்தில் அழுந்தி செய லற்று சித்திர விளக்கென இருந்தனர்.

இருவரு முணரா வண்ண லேனவெள் ளெயிறியாமை
சிரநிரை யநந்த கோடி திளைத்திடு முரத்திற் சீர்கொள்

கரதல மொன்று சேர்த்தி மோனமுத் திரையைக் காட்டி
ஒருகணஞ் செயலொன் றின்றி யோகுசெய் வாரி னுற்றான்
---கந்தபுராணம்,

ஆலமரத்தின் கீழ் ஒரு அதிசயமுண்டு; குரு வயது முதிர்ந்தவராகவும் சீடர் இளைஞராகவும் இருப்பது உலகவழக்கம்; அந்த ஆலமரத்தின் கீழ் குரு இளைஞர், சீடர்கள் வயது முதிர்ந்தவர்கள். குரு வியாக்யானம் செய்வதும் சீடர் மௌனமாக இருந்து கேட்பதும் உலகவழக்கம். அந்த ஆலமரத்தின் கீழ் குரு மௌனமாக இருக்கிறார், சீடர் ஐயமெல்லாம்நீங்கி வியாக்யானஞ் செய்துகொண்டிருக்கிறார், இந்த அதிசயத்தை ஆலமரத்தின் கீழ் கண்டேன் என்று ஆதிசங்கரர் கூறுகிறார்.

சித்ரம் வடதரோர் மூலே வ்ருத்தா[4]ச்சிஷ்யா குரு[3]ர்யுவா!
கு[3]ரோஸ்து மௌனம் வ்யாக்யானம் சிஷ்யா[2]ஸ்து சி[2]ந்நஸம்சயா:

"துங்கமிகு சனகன்முதல் முனிவோர்கள் தொழுதருகில் வீற்றிருப்ப
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்தியே சொரூபானு
பூதிகாட்டிச்
செங்கமல பீடமேற் கல்லாலடிக்குள் வளர் சித்தாந்த முத்திமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணாமூர்த்தியே சின்மயானந்த குருவே."
---தாயுமானர்.

படியதிரவேநடந்த கழல் வீரா :—

முருகப்பெருமான் மயில் மிசை பவனிவருங்கால் உலகங்கள் அதிர்கின்றன என அவருடைய பவனிச்சிறப்பை வியக்கின்றனர். மேலும் அப்பெருமான் குழவிப்பருவ மேற்கொண்டு தளர் நடையிட்டபோது, ஆதிசேடனது ஆயிரமுடிகளும், கீழ் ஏழுலகங்களும், நெறுநெறு என்று அதிர்ந்தன; வடமேருகிரி இடிந்து பொடிப்பட்டது; இந்திரன் தனது அமராவதியிற் குடிபுகுந்தான்; நிருதர்கள் வயிற்றில் எரிபுகுந்தது; எனப்பிறி தோரிடத்தில் வியந்தோதுகின்றனர்.

இமையவர்கள் நகரிலிறை குடிபுகுத நிருதர்வயி
றெரிபுகுத உரகர்பதி அபிஷேகமாயிரமும்
எழுபிலமு நெறுநெறென முறியவட குவடிடிய
இளையதளர் நடைபழகி விளையாடல்கூறுவதும்.
---சீர்பாதவகுப்பு.

பரமபத மாய செந்தில் :----

திருச்செந்தூர் உலகில் பரமபதமாக விளங்கி இகபர நலன்களை எளிதில் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை விளக்குகிறது; "பரமபதமே செறிந்த" என்றும் பாடமுளது.

கருத்துரை.

சிவபெருமானது இடபுறமருவிய மலைமகள் குமரா! வடிவேல! மயில்மிசை பவனிவரும் கழல் வீர! செந்திலாதிப! பழநிபுரிப் பகவ! அடியேன் உலகிற்பிறந்து வளர்ந்து வாலப்பருவமடைந்து பெண்மயக்கில் சிக்கி வீணே அலையாமல், சிவகலையுணர்ந்த அடியாருடன் கலந்து தேவரீரது திருவடியிற் சேருமாறு அருள்புரிவீர்.

வினு விடை மணிகள்

(ஆதி சங்கரர்.)

க: குலகமலதிநேச: ஸதி குருவிபவே யோ நம்ர:!
கச்ய வசே ஜகதேதத்ப்ரியஹிதவசநஸ்ய தர்மநிரதஸ்ய!!

வினு:---நாம்பிறந்துள்ள குலமாகிய தாமரை எந்தசூரியனைக் கண்டு ஆனந்தத்துடன் ப்ரகாசிக்கும்?

விடை:---குணங்கள் பரிபூரணமாகவிருந்தும், பரிபூரணமான விநயத்துடன் இருப்பவனைக் கண்டால் குலமாகிய தாமரை பிரகாசிக்கும்.

வினு:---இந்தப் பிரபஞ்சம் யாருக்கு வசப்படும்?

விடை: --- பிரியமாகப் பேசக்கற்றுக்கொண்டு தர்மத்தை அனுஷ்டிப்பவனுக்குப் பிரபஞ்சம் வசப்பட்டுவிடும்.

(ஜகத்தை வசியப்படுத்துகிறதற்காக விநயத்தைக்கைக் கொள்ளக்கூடாது. விநயத்துடன் இருந்தால், ஜகத்து தானுக வசப்பட்டுவிடும்.)

உ

ஓம் குஹாய நம :

சிவானந்த லஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(273-வது பக்கத் தொடர்ச்சி).

(28) ஸாரூப்யம் தவபூஜனே சிவ மஹாதே[3]வேதி ஸங்கீர்த்தனே
ஸாமீப்யம் சிவ ப[4]க்தி து[4]ர்யஜனதா ஸாங்க[3]த்யஸம்பாஷ[4]ணே !
ஸாலோக்யம் சராசராத்மகதனு த்[4]யானே ப[4]வானீபதே
ஸாயுஜ்யம் மம ஸி[3]த்[4]தமத்ர ப[4]வதி ஸ்வாமின்க்ருதார்த்
தோஸ்ம்யஹம் !!

பதவுரை.

பவானீபதே - பார்வதிக்குப்பதியே,
தவ - தேவரீருடைய,
பூஜனே - பூஜையில்,
ஸாரூப்யம் - சாரூப்பியமும் (உம்முடைய உருவத்தை யொத்த உருவத்தை யுடையவனுயிருப்பதும்),
சிவ - சிவபெருமானே !
மஹாதேவ - மஹாதேவா !
இதி - என்று,
ஸங்கீர்த்தனே - துதிசெய்வதில்,
ஸாமீப்யம் - சாமீப்பியமும் (உமது அருகில் இருப்பதும்)
சிவபக்திதுர்யஜனதா
ஸாங்கத்ய ஸம்பாஷணே - பரமசிவத்தினிடம் உண்டாகும் பக்தியாகிய சுமையைச் சுமப்பவர்களான ஜனக்கூட்டங்களின் (சிவனடியார்களுடைய சேர்க்கையில் பேசுதலில்,
ஸாலோக்யம் - சாலோக்கியமும் (உம்முடைய ஒரே உலகத்திலிருப்பதும்)
சாசராத்மகதனுத்யானே - உயர்திணை அஃறிணை வடிவான உமதுதிருமேனியின் தியானத்தில்,
ஸாயுஜ்யம் - சாயுஜ்யமும் (உம்முடன் கலத்தலும்),
மம - அடியேனுக்கு,
ஸித்தம் - கிடைத்தது,
பவதி - ஆகிறது,
ஸ்வாமின் - உடையவரே !
அஹம் - அடியேன்,
அத்ர - இப்பிறப்பிலேயே,
க்ருதார்த்த : - பயன் பெற்றவனுக,
அஸ்மி - ஆகிறேன்.

பொழிப்புரை.

ஓ உமாபதியே ! உமது பூஜைசெய்து கொண்டிருக்கு அடியேனுக்கு உமதுவடிவமும் உமது சீர்பரவ உமது சமீப வாசமும்

உமது அடியார்களுடன் கலந்து உரையாடிக்கொண்டிருக்க உமது உலகு வாழ்வும், எல்லாமான உமது திருஉருவ தியானஞ் செய்ய இப்பிறப்பிலேயே சிவமாந்தன்மையும் உண்டாகும். அதனால் அடியேன் பயன்பெற்றவனாகுவேனன்றோ ?

(29) த்வத்பதா[3]ம்பு[3]ஜமர்சயாமி பரமம் த்வாம் சிந்தயாம்யன் வஹம்
த்வாமீசம் சரணம் வ்ராஜாமி வசஸா த்வாமேவ யாசே விபோ[4] !
வீக்ஷா மே தி[3]ச சாக்ஷுஷீம் சகருணும் தி[3]வ்யைச்சிரம் ப்ரார்தி[2]தாம்
சம்போ லோககு[3]ரோ மதீ[3]யமனஸ: ஸௌக்[2]யோபதே[3]சம் குரு !

பதவுரை.

விபோ	- எங்கும் நிறைந்தவரே !	சிரம்	- வெகுகாலமாய்,
த்வத்பாதாம்புஜம்	- உமது திருவடித் தாமரையை,	ப்ரார்திதாம்	- விரும்பப்பட்டதாயும்,
அர்சயாமி	- பூசிக்கிறேன்,	ஸகருணும்	- அருளுடன் கூடினதாயும்,
அன்வஹம்	- நாள்தோறும்,	சாக்ஷுஷீம்	- கண்ணுடையதாயுமிருக்கிற,
பரமம்	- உயர்ந்தவராகிய,	வீக்ஷாம்	- (கடைக்கண்) பார்வையை,
த்வாம்	- தேவரீரை,	மே	- அடியேனுக்கு,
சிந்தயாமி	- நினைக்கிறேன்.	திச	- கொடுத்தருள்வீர்,
ஈசம்	- எப்பொருட்கும் இறைவராகிய,	சம்போ	- சுகத்தைச்செய்பவரே !
த்வாம்	- உம்மை,	லோககுரோ	- உலகத்திற்கெல்லாம் குருவே !
சரணம்	- அடைக்கலமாக,	மதீயமனஸ :	- அடியேனுடைய மனதிற்கு,
வ்ராஜாமி	- அடைகிறேன்,	ஸௌக்யோபதேசம்	- பேரின்பப் பெருவாழ்வினுடைய உபதேசத்தை,
வசஸா	- வாக்கினால்,	குரு	- செய்தருள்வீர்.
த்வமேவ	- உம்மையே,		
யாசே	- (வேண்டியதைக்) கேட்டுக்கொள்ளுகிறேன்,		
சம்போ	- சுககாரணனே,		
திவ்யை :	- தேவர்களால்,		

பொழிப்புரை.

எங்கும் நிறைந்தவரே ! எப்பொருட்குமிறைவரே ! உமது கழலிணைக் கஞ்சங்களை அருச்சிக்கின்றேன் ; தேவதேவராகிய

உம்மையே தியானிக்கின்றேன்; சென்றடையாத திருவுடைய உம்மையே தஞ்சமாக அடைகிறேன்; உம்மையே யாசிக்கிறேன்; அமரர்களால் வேண்டப்படுகின்ற உமது கடைக்கண்பார்வையைத்தந்து, அடியேனுடைய மனதிற்கு நலமான பிரமோபதேசத்தை செய்தருள்வீர்.

3 3 4
(30) வஸ்த்ரோத்தூத விதௌ ஸஹஸ்ர காதா புஷ்பார்சனே விஷ்ணுதா
3 4 3 4 2 4
கந்தே கந்தவஹாத்மதான்னபசனே பர்ஹிர்முகாத்யக்ஷதா!
3 4 3 3 3 3
பாத்ரே காஞ்சன கர்பதாஸ்தி மயி சேத்பாலேந்து சூடாமணே
சுச்ரூஷாம் கரவாணி தே பசுபதே ஸ்வாமின் த்ரிலோகீ
3
குரோ!!

பதவுரை.

பாலேந்து சூடாமணே - பிறைச்சந்திரனைச் சூடாமணியென்னும் ஆபரணமாக உடையவரே!
பசுபதே - உயிர்களுக்குத்தலைவரே!
ஸ்வாமின் - எல்லாவற்றையும் சொத்தாக உடையவரே!
த்ரிலோகீகுரோ - மூவுலகங்களுக்குங் குருமூர்த்தியே,
வஸ்த்ரோத்தூதவிதௌ - உமக்கு ஆடையுடுத்தி உபசரிக்கும் செயலில்,
ஸஹஸ்ரகாதா - சூரியனுடைய தன்மையும் ஆயிரம் கைகளை யுடையவனாயிருத்தலும்,
புஷ்பார்சனே - மலர்களினால் பூசை செய்யும் செயலில்,
விஷ்ணுதா - கண்மலரைக்கொண்டு அர்ச்சித்தவிஷ்ணுமூர்த்தியினுடைய தன்மையும்,
கந்தே - சந்தனங்கொடுத்து உபசரிக்கும்செயலில்,
கந்தவஹாத்மதா - வாயுவினுடைய தன்மையும் (வாசனைகளை நன்கு உணர்கின்றவனாயிருத்தலும்),
அன்னபசனே - சமைத்த அன்னமுதலியவைகளைக் கொடுத்து உபசரிக்குஞ் செயலில்,
பர்ஹிர்முகாத்யக்ஷதா - இந்திரனுடைய தன்மையும், (உயர்ந்த சமையற் காரனாயிருத்தலும்),
பாத்ரே - அர்க்கிய பாத்திரம் முதலியவைதந்து உபசரிக்கிற செயலில்,
காஞ்சனகர்பதா - பிரமனுடைய தன்மையும் (தங்களையுடையவனாயிருத்தலும்),
மயி - அடியேனிடத்தில்,
அஸ்திசேத் - இருக்குமேயானால், (அப்போது),
தே - உமக்கு,
சுச்ரூஷாம் - பணிவிடையை (பூஜையை),
கரவாணி - செய்வேன்.

305

உ

ஓம் குஹாய நம :

கந்தர் திருவிளையாடல்

(276-வது பக்கத் தொடர்ச்சி.)

இவ்வாறு அண்டகடாகம்வரை வளர்ந்த விந்தகிரியின் செருக்கை மகத்துவமிக்க அகத்திய முனிவரைக் கொண்டு அடக்குவித்தல் வேண்டும் என்று துணிந்த சந்திர சூரியரும் பிறரும் அகத்தியரை நினைந்து,

மகத்துவ முடையாயோலம் மறையுணர் மணியே ஓலம்
மிகத்துயர் படைத்தே மோலம் விமலனே ஓலம் விந்த
நகத்தினலலைந்தே மோலம் ஞான நாயகனே ஓலம்
அகத்திய முனிவா ஓலம் அடிகளே ஓலம் ஓலம்.

"எம்பெருமானே [விந்தமலை செருக்குற்று விண்ணெலாமூடி அண்டகடாகம்வரை வளர்ந்து ஆகாயவழியைத் தடைசெய்ததால் எங்களுக்கு வழியிலதாயிற்று ; நிலவுலகமும் பொழுது மயங்கின ; அமிழ்தினுமினிய தமிழ் முனியே ! இத்துன்பத்தை நீக்கி யருளல் வேண்டும்" என்று கூறினார்கள்.

மேருமலைச் சாரலில் தவம்புரிந்து கொண்டிருந்த அகத்திய முனிவர் இதனையறிந்து, விந்தமலையின் தருக்கை யடக்கி விண்வழியை முன்போலாக்கி

பொழிப்புரை.

ஓ பிறைசூடிய பெருந்தகையே! பசுபதியே! தேவரீருக்கு ஆடைசாத்தி உபசரிக்க ஆயிரங்கரங்களுடைய ஆதித்தனது தன்மையும், மலர்களால் அர்ச்சிக்க கண்மலர்தந்த திருமாலினது தன்மையும், வாசனைகளைத்தருவதற்கு பரிசுத்தனாகிய வாயுதேவனுடைய தன்மையும், உண்டிமுதலியவை தருவதற்கு பாகஞ்செய்வதில் வல்லவனான இந்திரனுடைய தன்மையும், பாத்திரங்களினால் உபசரிக்கப் பொன்னிறமுடைய பிரமதேவனுடையதன்மையும், அடியேனிடத்தில் உண்டானால், உமக்குப் பணிவிடையைச் செய்ய வல்லவனாவேன்.

---(தொடரும்.)

இமையவர் முதலியோர் இடர்களை நீக்க எண்ணி, கண்ணீர்மல்க, கரமலர் முகிழ்ப்ப, அன்பு மீதூர, என்பெலாமுருக சிவபெருமானைத் தியானித்தார். வந்த வேளை யெரித்து கந்தவேளை நல்கிய அந்திவண்ணப் பெருமான் நந்தி மேல் வந்தருளி "சிந்தையில் விரும்பியது என்னை ? வேண்டுதி" என்ன, முனிவர் "விந்தகிரியின் தருக்கையகற்றி உயிர்கட்கு நலஞ் செய்யும் ஆற்றலை யருள்புரிவீர்" என்று விண்ணப்பித்தார். சிவபெருமான் "முனிவ! ஆற்றலைத்தந் தோம்; விந்தத்தை யடக்கி தென்திசையில் பொதியமலையிலிருப்பாய்" என்று அருளிச்செய்தார். அகத்தியர் தொழுது," தேவரீரை பூசிப்பதற்கு நீர்; குறைவற் றிருக்க ஓர் தீர்த்தத்தைத்தந்தருளுக" என்று வேண்டினர். சிவபெருமான் திருக் கயிலை மலையிலிருந்த ஏழுநதிகளுள்ளும் தூய்மையான காவேரி நதியை வரு மாறு நினைக்க,அந்நதி அதனை அறிந்து அஞ்சி, விரைந்துவந்து பணிந்துநிற்ப, பெருமான் அதனை நோக்கி "பெண்ணே! நீ தீமையில்லா தென்றிசைக்குச் செல்லுகின்றஅகத்திய முனிவனோடு போதல்வேண்டும்' என்று பணித்தருளி னர்"எந்தையே! இம்முனிவர் ஐம்பொறிகளையடக்கிய அருந்தவராயினும் இவர் ஓர் ஆடவர் ; யான் ஒரு பெண் ; ஆதலினால் இவருக்குப்பின் செல்லுதல் முறையோ ?" என்று காவேரி சொல்ல, சிவபெருமான், "பெண்ணே! இம் முனிவன் தவவொழுக்கத்தில் ஒப்பற்றவன் ; நம் அடியாருட் சிறந்தவன் ; மன மாசகன்றவன் ; இவன் பின் செல்லுதி" என்று அருளிச் செய்தார். நதி இணங்கி, "இன்று இவர் பின் செல்வேன் ; நீங்குங்காலம் என்று ?' என்று வினவ, சிவமூர்த்தி "நன்று நன்று; இவ்வருந்தவன் என்று உன்பொருட்டாகப் பார்த்து கைகாட்டுவானோ அன்று இவனை நீங்கிப் பூமியிற் சென்றிருப்பாய்" என்று சொல்லி "அகத்தியனே! காவிரி நதியை உன் கமண்டலத்தில் ஏற் பாய் என்று பணித்தருளினர். அந்நதி அகத்தியரை அடைந்தது. சிவபெரு மான், "தவமுனிவ! தென்திசைக்குச் செல்லுதி" என்று கணங்களுடன் மறைந்தருளினர்.

அகத்தியர் நிலவுலகின் வழியாகத் தென்திசையை நோக்கிச் செல்லும் பொழுது, தாரகாசுரனுடைய மாயாபுரி சமீபித்தது. அங்கேயுள்ள கிரவுஞ்சன் என்னும் அசுரன் இவர் வரவைக்கண்டான். அவன் மண்ணை விண்ணாகவும், விண்ணை மண்ணாகவும், மலையைக் கடலாகவும் கடலை மலையாகவும், கதிரை மதியாகவும் மதியைக் கதிராகவும் பிறவும் செய்யவல்ல மாயாவி. அகத்தியர் வரும் வழியில் பலசிகரங்களுடைய ஒரு மலையாய் அதில் ஓர் வழியுங்காண நின்றான். முனிவர் பெருமான் அம்மலை நடுவேயுள்ள வழியிற் சென்றார். வழிமறைய, மற்றொருவழி வந்தது ; அவ்வழிசெல்ல அதுவும் காணாதாக, பின் னொருவழி வந்தது. அதன் வழிசெல்ல அக்கினி நெருங்கிச் சூழ, சுழல் காற்று வீச? மழை பெய்ய ; இடியிடிக்க, இருள்மூட பற்பல மாயங்களைக் கிரவுஞ்சன் செய்தான். அகத்தியர் அசுரர் மாயை யென அறிந்து, அனல் போற்சினந்து நகைத்து, கரத்திலுள்ள தண்டாற் குற்றி வழியுண்டாக்கி, "அறிவற்ற அசுரனே நீ மலைவடிவாகவே இருந்து அவுணர்கட்டு இருப்பிடமாய், அமரர்கட்கும் அருந்த வர்கட்கும் அல்லற் செய்க. நம் தண்டாற் செய்த முழைகள் மாயங்கட்கு உறை

யுளாகுக. பின் குமாரக்கடவுளுடைய வேற்படையால் மாளக்கடவாய்'' என்று சபித்து, கமண்டல நீரை மந்திரத்துடன் தெளித்து, அவன் மாயத்தைக் கெடுத்து, வெளிவந்து தென்திசை நோக்கி வருவாராயினர். அக்கிரவுஞ்சனை தேவரீர் அழித்தீர். அறுமுகவள்ளலே! உம்மையன்றி அவனையழிக்கவல்லார் யாவர்?

அகத்தியர் காசியிற் சென்று கண்ணுதலை வணங்கி, விந்தமலைச் சாரலை யடைந்து ''விந்தமலையே! யாம் பொதியாசலத்திற்குச் செல்கிறேம்; சிறிது வழியைத் தருதி'' என்றார். விந்தமலை ''சந்திரசூரியர் செல்லுதற்கரிய தன்மையால் விண்வழியை மறைத்து, நெடியவடிவையுடையதிருமாலைப்போல் நின்றேன்; குறியவடிவையுடைய உனக்கு அஞ்சிவழியைத்தரேன். மீளுதி'' என்றது. அகத்தியர் நகைத்து அரனைநினைத்து, சத்திய உலகம் வரையும் கரத்தைநீட்டி விந்தமலையின் உச்சியில்வைத்து பாதலம்வரைக்கும் அழுத்தி விட்டார். விண்ணவர் வியப்பெய்தினர். சேடனுலகஞ் சென்ற விந்தம் ''தபோதனரே! அறியாது செய்த குற்றத்தை மன்னிப்பீர்; நான் எழுங்காலம் எப்போது? என்று வேண்ட, அகத்தியர் ''யான் சென்று திரும்பிவருங்கால் எழுவாய், என்று கூறினர். முனிவர் பெருமான் யாவராலும் வணங்கப்பட்டு தென் திசை நோக்கிச் சென்றார்.

குடகதேசத்திலிருந்த வில்வலன் வாதாவி என்போர் குறுமுனிவரைக்கண்டு ''இவன் அவுணரைக் கொன்றவன், கடலைக் குடித்து உமிழ்ந்தவன், இவனை இப்பொழுதே உணவு தந்துகொல்வோம்'' என்று பேசிக்கொண்டபின், வாதாவி ஆடாகிப் புல்மேய்ந்து கொண்டிருந்தான். வில்வலன் சடையும் திருநீறும் உருத்திராக்கமும் மரவுரியும் உடையோனுகிதவவடிவங்கொண்டு, அகத்தியர்முன்வந்து முறைப்படிபணிந்து'' இன்றே என்தவம் பலித்தது; இருக்கைக்கு எழுந்தருள்வீர்'' என்று தனது பன்னசாலைக்குக் கொண்டு போய்,பீடமளித்து, பாதபூசை செய்து, ''எம்பெருமானே! எளியவன் தரும் புற்கையை அமுதுசெய்து அடிமையையாண்டருளும்'' என்று வேண்டினன். அகத்தியர் அவனுடைய அன்புகலந்த வஞ்சனை மொழியைக் கேட்டு கருணை கொண்டு, இசைந்தருளினர்.

வில்வலன் நீராடி மடைப்பள்ளியை யடைந்து மிகவுந் தூய்மையாக அன்னங்களையும் கறியமுதுகளையும் மிக இனிமையாகச் சமைத்தான் தம்பியாகிய ஆட்டையும் அறுத்து கறிசமைத்தான் பழங்களையும் தேன் நெய் பால் இவைகளையும் பூசைக்குரியவற்றையும் சேகரித்துவைத்து: முனிவரை வணங்கி, ''காலந்தாழ்ந்ததற்கு மன்னிக்க வேண்டும். உணவுக்கு எழுந்தருள்க'' என்று அவரை எழுந்தருளச் செய்து இருத்தி, இலையிட்டு மிகுந்த பக்தியுடன் அமுது படைத்து உண்ணச் செய்தான். அகத்தியர் சிவத்தைப்பேணி அவன்வஞ்சம் உணராமல் உண்டு ஆசமனஞ்செய்து சிவ சிந்தையுடன் வீற்றிருந்தார்.

அப்பொழுது வில்வலன் பிரமதேவர்தந்த வரத்தை நினைத்து. அகத்தியரைக் கொல்லக் கருதி, தம்பியே விரைந்து வருதி'' என்று அழைத்தான்.

வாதாவி அகத்தியர் வயிற்றில் வாதாவி ஆடாகி "அண்ணே! இக் கொடிய முனிவனைக் கொன்று வருவேன்" என்று ஆர்த்தான். அகத்தியர் அசுரர் செய்தமாயத்தையறிந்து வெகுண்டு, வாதாபி ஜீர்ணோபவ' என்று ஒருமுறை வயிற்றைத்தடவினர். உடனே வாதாபி வயிற்றுக்குள் வெந்து பொடியாயினன் அதனையறிந்த வில்வலன் வெகுண்டு அசுரவடிவங்கொண்டு ஒரு தண்டாயுதத்தை ஏந்தி முனிவர் பிராணனைக் கொல்லவந்தான். அவர்தமது கரத்திலிருந்த ஒரு தருப்பையை சிவப்படைக்கலமாக்கிவிடுக வில்வலன் மாண்டான்.

பின் அகத்தியர் கொங்க தேயத்திற் செல்லும்போது, இறந்த வில்வலன் வாதாவி என்போர் தவத்தர்கள் போலவந்து, கரிய உடம்பும் சுழலுங்கண்களு முடையராய் அவரை அணுகியும் அகன்றும் சூழ்ந்தும் ஆரவாரித்து அணுகினர்கள். தவமுனிவர் ஈது கண்டு, இவர்கள் துருவாச புத்திரர்களாதலால் பிரமகத்தியாய் நம்மைத் தொடர்ந்தார்கள்; இப்பாவம் நீங்கும் பொருட்டு இங்கு சிவபெருமானை வழிபாடு செய்வோம்" என்று எண்ணி, ஆங்கோரிடத்தில் சிவலிங்கத்தை வைத்து சிவபெருமானை மெய்யன்புடன் பலநாள் வழிபாடு செய்து கொண்டிருந்தார். அதனால் அவரைத் தொடர்ந்த பிரமகத்தி நீங்கியது.

இது இப்படியிருக்க, அகத்தியருடைய செயலையறிந்த நாரதர், சூரனுக்குப் பயந்து மூங்கில் வடிவாய்ச் சீர்காழியில் சிவபெருமானை நோக்கித் தவம் புரிந்து கொண்டிருக்கும் இந்திரனிடஞ்சென்று, பணிந்த இந்திரனை வாழ்த்தி, சுகமே இருக்கின்றனையோ?" என்று வினவ; இந்திரன் தொழுத கையினனாய். "அடிகேள்! இந்நாள் வரை சுகமேயிருந்தேன். அடியேன் செய்யுஞ் சிவார்ச்சனைக்கு இடையூறுண்டாகியுளது மலர்ச்சோலை நீரின்றி வாடிற்று. இக் குறையால் வாடுகிறேன்" என்றான் நாரதர். இந்திரனே! உனது அரசாட்சி பழையபடியே சிவானுக்கிரகத்தால் உனக்கு வரப்போகிறது; சிவார்ச்சனைக்கு வந்த இடையூறும் நீங்கும். அகத்தியர் கொங்க தேயத்தில் சிவபூசை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்திலுள்ள காவேரியாற்றை இங்கேவருமாறு செய்தால் உன்மனக்குறை தீரும்" என்றார். இந்திரன் அகத்தியருடைய கமண்டலத்தைக் கவிழ்க்கவல்லார் யாவர்?, அக்கினிமலையை யணுகும் கொசுவும் உளதோ? என்று வினவ, நாரதர் 'இந்திரனே! விநாயகரை வழிபாடு செய்யின் அவர் அக்கமண்டலத்தைக் கவிழ்த்து விடுவார்" என்று சொல்ல இந்திரன் மகிழ்ந்து, ஐந்துகரத்து ஆனைமுகப் பெருமானை! அன்புடன் வழிபாடு செய்தான். பலகோடிகணங்கள் சூழ தழை செவி மழை மதப் புழைகரத் தடங்கைப் பெருமான் தோன்றியருளினர். இந்திரன் பன்முறை பணிந்து துதித்து நிற்ப, துதிக் கைப்பிரான் "நினக்கு வேண்டும் வரம் யாது?" என்று அருள, தேவர்கோமான், "எம்பெருமானே! சிவபூஜைக்குரிய நந்தனவனம் நீரின்றிவாடுகின்றது. அகத்திய முனிவர் கொங்கதேசத்தில் சிவபூசை செய்து கொண்டிருக்கிறார். அவருடைய கமண்டலத்தில் காவேரி யடங்கியுள்ளது. அதனைக் கவிழ்த்துவிட்டால் இவ்வனம் செழிக்கும்" என்று விண்ணப்பஞ் செய்தான். விநாயகமூர்த்தி "அங்ஙனமே செய்வோம்" என்று

அருள் புரிந்து, காகவடிவெடுத்து கமண்டலத்தின்மீது அமர்ந்தார். அகத்தியர் காகமென எண்ணி, அதனை ஓட்டும் பொருட்டுக் கையையுயர்த்தி ஓச்சினர். உடனே காக வடிவாயிருந்த கணபதி கமண்டலத்தைக் கவிழ்த்து காவிரியாற்றை நோக்கி, "நீ பூமியிற் செல்லக்கடவாய்" என்று பணித்தருளினர். காவிரிநதி விண்ணுலகமும் மண்ணுலகமும் நடுங்கும்படி ஆரவாரித்துக் கொண்டு விரைந்து பூமியில் பாய்ந்தது, விநாயகர் காகவடிவை நீங்கி அந்தண பிரமசாரிவடிவுடன் சென்றார், அதுகண்ட முனிவர் புரமெரித்த புரிசடைக் கடவுள் போல் வெகுண்டு, "இவன் தேவனோ அவுணனோ யாவனோ ? இவனை விரைந்து அறிவேன்" என்று அவரைத்தொடர, விநாயகர் அஞ்சினவர்போல் ஓடினர், அருந்தவ அடிகள் அவரது சென்னியிற் குட்டும்படி நிவந்து தமது இருகரங்களையும் குவித்துக் கவித்து அவரைத்துரத்தினர். விநாயகர் அருகில் அகப்படுவார் போலக்கிட்டுவார் ; ஆகாயத்திற் கிளருவார் ; திசைகளிற் செல்லுவார்; பூமியில் வருவார். அகத்தியர் மிகவும் தளர்ந்து "இவன் மிகவும் மாயன் ; என் செய்வேன்" என்று வருந்தினர். ஒற்றை மருப்புடைய வெற்றிக்கணபதி திருவுளமிரங்கி, தமது திருவுருவக்காட்சியை நல்கினர், முனிவர் நடுநடுங்கி "ஆ ! கெட்டேன். ஐந்து கரத்து எந்தையோ ஈண்டெழுந்தருளினர். அந்தோ அறியாது துரத்தினேனே"? என்று கலங்கி ஏங்கி, முன்னே விநாயகரைக் குட்டுதற்கு ஓங்கிய கரத்தை மலையிலே இடிவிழுந்தாப்போல தமது நெற்றியிலே குட்டிக்கொண்டார். விநாயகர் தண்ணருள் செய்து "அகத்தியனே ! அஞ்சற்க ; இந்திரன் சிவபூசைக்கு என்று வைத்த பூம்பொழில் செழிக்க அவன் வேண்டுகோளுக்கிரங்கி இதனைக்கவிழ்த்தோம். நினக்கு யாதுவரம் வேண்டும் ?" என்று அருள்புரிய, அகத்தியர் "தங்கள் திருவடியிடத்து, மாறுத அன்புடையவனுயிருக்க வரமருளவேண்டும். இப்பொழுது தமியேன் செய்ததுபோல் தேவரீரது சந்நிதியில் முட்டியாகப் பிடித்த இருகைகளால் குட்டிக் கொள்பவருடைய குறையை நீக்கி நல்லருள்பாலிக்க வேண்டும்" என்று வரமிரந்தார். ஐங்கரத்தண்ணல் அவ்வரங்களையருளி "இன்னும் யாதுவேண்டும்" என அகத்தியர், "எந்தையே! கமண்டலத்திலுள்ள காவிரி நதி சிறிதுமின்றி கவிழ்ந்து விட்டது, அதுபோன்ற புனிதத்தீர்த்த மொன்றைத் தந்தருள்வீர்" என்று வேண்டினர். விநாயகர் தமது கரத்தை நீட்டி காவிரி வெள்ளத்தில் சிறிது நீரையள்ளி கமண்டலத்தில் விட்டார். உடனே கமண்டலம் நீர் நிரம்பி வழிந்தது. அகத்தியர் அது கண்டு அற்புதமுற்று, "எம்பெருமானே ! கவிழ்த்த நீரை முன் போல் நிரப்பிக்கொடுத்தீர் ; தம்மையன்றி இங்ஙனம் செய்யவல்லார்யாவர்? அடியேனை இன்றுபோல் என்றும் காத்தருள வேண்டும்" என்று துதித்தார். விநாயகர் அருள்புரிந்து கணங்களுடன் மறைந்தருளினர். அகத்தியர் தென்திசைநோக்கிச் செல்வாராயினர்.

முனிவர் பிரான் செல்லும் வழியில் விஷ்ணுஸ்தலமாகிய திருக்குற்றாலமென்னும் நகரம் எதிர்ப்பட, சிவநாமங்களைக் கூறிக் கொண்டு அந்நகரை அடைந்தார். அங்கு ஓர் திருமால் திருவாலயமுளது ; அதனைத் திருமுற்றம்

என்பர். அளவற்ற பிராமணர்கள் இருந்தனர். அவர்கள் உண்மைநூல்களைப் படித்தும், தெளிவில்லாராய் சிவத்துவேஷ முடையவராய், சிவனடியாரைக் கண்டால் பிறவிப்பகைவரைப் போல் பொங்கி வெகுண்டு இகழ்வர். சற்குண மின்றி குல ஒழுக்கமுமின்றி யிருந்தனர். அகத்தியர் அவர் செயலை யறிந்து விஷ்ணுவாலயத்தின் முன்வந்தார். வருதலும், வழியில் வந்த அக்கோயிலின் வைணவர்கள் சினந்து நோக்கி ''சாம்பலையும் தகாதமணியையும் அணிந்தாய்; பிச்சையேற்கும் சிவனுக்கு நீ அடியவன், இங்குவரத்தகாது. விரைந்து நீங்கு வாய்'' என்று விரட்டினர், அகத்தியர் கோபஞ்செய்யாது நகைத்து ''வேத நெறியை இழந்த நீவிர் இங்கே இருத்தலை நான் அறியேன், முனியற்க செல்லுவேன்'' என்று திரும்பிச்சென்று, ''சிவநிந்தை புரியும் இவர் அறியா மையை அடியுடன் களைவேன்'' என்று எண்ணி, விஷ்ணுபத்தர்களைப் போல் பாகவத வடிவங்கொண்டு மீண்டு ஆங்கு சென்றார். அவரைக்கண்ட வைணவர்கள் மகிழ்ந்து எதிர்கொண்டு இறைஞ்சி துதித்து நின்றார்கள். அகத்தியர் '' இவ்வணக்கம் விஷ்ணுமூர்த்திக்குப் பிரீதியாகுக ; உமது தரிசனத்தால் மகிழ் வுற்றேம். திருமலையிலிருந்து வருகின்றேம், இப்பொழுது அத்திகிரிக் குச் செல்கிறோம். இங்கு எம்பெருமான் திருத்தளியுளதென்று கேட்டுவணங்க வந்தேம்'' என்று கூறினர். அவர்கள் முனிவர் பிரானை வணங்கி ஆலயத் திற்கு அழைத்தேகினார்கள். முனிவர் வலம்வந்து வணங்கி, ''இவரைப்பூசிக்க திருமஞ்சன முதலியவைகளைத் தருதிர்'' என்று கூறினர். உடனே திருமஞ் சனப் பொருள்களைச் சித்தஞ்செய்தனர். அகத்தியர், ''வைணவர்களே ! இவரைப் பூசிக்கும் முறையை எல்லீரும்பாருங்கள்'' என்று கூறி சிவத்தை யுன்னி, திருமாலினது திருமுடிமேல் தமது திருக்கரத்தை வைத்து, ''குறுகு குறுகு'' என்று இருத்தி அனலிற்பட்ட மெழுகுபோல் குழையச்செய்து சிவ லிங்கமாக்கி, முன்னைவடிவு கொண்டு பஞ்ச சுத்திசெய்து பூசித்தார். வைணவப் பிராமணர் கோபித்து ''இக்குறியன் மிகவும் வஞ்சன் ; நம்மை ஏமாற்றினன் ; இவனைப் பிடியுங்கள்'' என்று சூழ்ந்து கொண்டார்கள். தம்மைப்பற்றும்படி வளைந்துக் கொண்ட அவர்களை எரிஎழப்பார்த்து சினத்தீயை விடுத்தார். அத்தீ அவர்களை வெதுப்பி விரட்ட, அவர்கள் ஆற்றாது அஞ்சி திசைகள் தோறும் சென்று ஒளிந்தார்கள். அன்று தொட்டு அத்தலம் சிவத்தலமா யிற்று. அகத்தியர் அரனுரைப்பணிந்து பொதியமலை சேர்ந்து சிவத்தைப் பேணி தவத்தைச் செய்து கொண்டிருந்தார்.

---(தொடரும்).

ஓம் குஹாய நம :

கற்பு

(281-வது பக்கத் தொடர்ச்சி).

கணவன் மனைவியை நடத்தும் முறை

கணவன் மனைவியிடம் அன்பையும் ஆதரவையும் காட்டவேண்டும்; மனைவிகணவனிடம் அடக்கமும் பக்தியும் வைத்து ஒழுகவேண்டும். தற்காலத்தில் கணவனுக்கும் மனைவியிடத்தில் மெய்யன்பில்லை; மனைவிக்கும் கணவனிடத்தில் நன்மதிப்பில்லை; இவ்வாறு பலகுடும்பங்கள் இருந்து அல்லற் படுகின்றன. அன்பொழுக்கம் நிரம்பிய ஆடவனையும் கற்பொழுக்கம்பூண்ட பெண்ணின் நல்லாளையும் காண்டல் அரிதாகிவிட்டது. "சித்திரத்திலும் என் மனைவி யல்லாத பிற பெண்ணுருவைக்காணமாட்டேன்" என்றிருந்த தீர ஒழுக்கத்தை ஆடவர் அறவேவிடுத்தனர். இராமசரித்திரத்தை இடைவிடாது கேட்கின்றனரேயன்றி இராமபிரானைப்போல் ஏகபத்தினிவிரதத்தைக்கைக் கொள்ளவேண்டு மென்று கனவிலும் நினைப்பவரேயில்லை. பெண்கள் கற்பொழுக்கத்தில் தலைசிறந்து விளங்கவேண்டுமென நினைக்கிறார்களேயன்றி தாங்கள்(ஆடவர்)அப்படியே மனைவியைத்தவிர பிறமாதரைமனத்திலும்தீண்டா மலிருக்கவேண்டுமென்றபேராண்மையைக் கொள்கின்றாரில்லை. தன்னுடைய தூய உடம்பைத் தகாத முறையில் தூய்மையில்லாத பலரும் எச்சில்செய்த பரி கலத்தின்மீது காதலுற்றுக் கெடுக்கின்றனர். மனைவியும் மக்களும் நல்லுணவும் நல்லாடையு மின்றி வாடி வருந்தி ஏக்கமடைந்திருக்க, மற்றொரு மாதுடன் கலந்து இன்புற்று இந்திர போகமென செம்மாந்திருக்கின்றனர். என்னே இவர்மதி? எக்காலத்து உய்வுபெறுவர் ? செல்வமெல்லாந் தீர்ந்தபின் அவ்வயல் மகளிர் திரும்பியும் பாரார் கைவரண்டு மெய்தளர்ந்தபோது மனைவியிடம்வந்து வேறு வழியின்றி வாழ்கின்ற ஆடவர் ஆயிரக் கணக்காக இருக்கின்றனர். அப் போது தன்குற்றத்தை யுணர்ந்து தான் முன் மனைவிக்கு செய்த தீங்குகளை எண்ணி எண்ணி இதயம் புண்ணுகின்றனர் தான்முன் அளவிறந்த பணத்தை அள்ளி யிறைத்து விலைமதிக்கமுடியாத ஆடை ஆபரணம் வாசனை பண்டங்களை யெல்லாம்வாங்கி கமரிற் கவிழ்த்தபாலைப் போல், கடலில் கரைத்த காயம்போல் பிற மாதருக்குத்தந்துவிட்டதையும் இப்போது சால்வயிற்றுக்கு வழியற்றிருப்பதையும் உன்னி ஒன்றும் பேச வழியின்றி

மிளகைக் கடித்த கடுவான் போல் விழிக்கின்றார்கள். அக்காலத்தில் மனைவி தன்கணவன் முன்செய்த கொடுமைகளையெல்லாம் சிறிதும் நினையாது அவன் உயிருடனிருந்தால் போதும்; குங்குமமும் மஞ்சளும் நமக்குஇருந்தால் போதும் என்று எண்ணி தன்உடம்பை உழைத்தும், தன்தாய்வீட்டார் தனக்கு அருமையாகப்பூட்டிய பொன்னாபரணங்களை விற்றும் தன்கணவனைக்காப்பாற்றுகின்றாள். அளவற்ற அரியதனத்தைப் பொதுமகளுக்கீந்து வறுமையுற்றுவந்த கோவலனை அன்புடன் வரவேற்று காற்சிலம்பு தந்து ஆதரித்த கண்ணகியை அறியாதாரும் உளரோ? தன்கணவன் பிற இடங்களிற் சென்று பொருட் செலவு செய்து அரிதிற்றேடிக்கொண்டு வந்த நோய்களையும் தனக்கு வந்த நோயென எண்ணி திருமாங்கல்யத்தை விற்றாவது கணவன் சுகப்பட்டால் அதுவேகோடி புண்ணியமென்று மருந்து வாங்கித்தந்து சுகப்படுத்துவிக்கின்றனர். எத்தனை மாதர்கள் தன்கணவன் சுகமுறவேண்டுமென்று கண்ணீர் வடித்து கடவுளை வணங்குகின்றனர்; ஆலயத்தை நாடோறும் வலம் வந்து பிரார்த்தனைசெய்துக் கொள்ளுகிறார்கள், தன்னுடைய கணவன் எத்தனை கொடியவனாயிருந்தாலும் கணவனைப் பிறர் இகழ்ந்தபோது "நீங்கள் எப்படி அவரை இகழலாம்? உங்களுக்கென்ன அவ்வளவு இளக்காரம்? இன்றைக்கு அவர் இப்படி இருந்தால் நாளைக்கே நல்லவராகி விடுவார், அவர் குணம் மற்றவர்கட்கு இருந்தால் போதும், அவரைப்பற்றிப்பேச உங்களுக்கு என்ன உரிமையுளது" என்றுபரிவுடனும் ஆத்திரத்துடனும் மனைவி சண்டையிடுகின்றாள், வாழ்ந்தாலும் நல்குரவில் வீழ்ந்தாலும் இன்பதுன்பத்தில் பங்கெடுத்துக்கொண்டு ஒத்துழைக்கின்றாள். இத்தகைய மனைவியை வெறுப்பதும் பகைப்பதும் எத்தனைக் கொடிய செயல் என்பதை அன்பர் உய்த்துணர்க. "மனைவியை வெறுப்பது மிகவும் கொடிது; அவள்முகத்தைத் திரும்பிப்பாராமல் இருப்பது அழகல்ல; மாதத்திற்கு ஒருநாளாவது அவளுடன் நல்லவசனங்களைப் பேசுக" என்று நம்போன்றார் சொன்னால், சிலர் "அவள் (மனைவி) பேரைக் கூடச்சொல்லாதீர்; அவளை நினைத்தாலே நெஞ்சில் நெருப்புமூள்கிறது; உங்களுக்கு வந்தனம்; இது விஷயத்தில் தலையிடவேண்டாம்; மன்னிக்கவேண்டும்". என்று மனைவியை வெறுத்து உட்சுவரிருக்க புறஞ்சுவரைப் பூசிக்கோலஞ் செய்யும் சிலர் மறுமொழி கூறுகின்றனர். மனைவியை வெறுத்த அவ்வன்கணாளரை நாம் மன்னித்தாலும் கடவுள் மன்னிக்குமா? பிறமாய மகளிர் மயக்கால் தரும பத்தினியை வெறுக்கும் அம்மறச்செயலே அவரை அல்லற்படுத்தும்.

ஆதலால், அடவர் சுன்மனையாளைத் தனிமனையிருத்திப் பிறன்மனைக் கேகும் பெரும்பேதைமைக் குணத்தை பள்ளந்தோண்டி ஆழப் புதைத்துவிட்டு, தன்மனைவியை இம்மைக்கும் மறுமைக்குந்துணை யென்று எண்ணி மனைவியுடன் மகிழ்ந்துவாழவேண்டும். புத்தேளிரும்புகழுமாறு புனித வாழ்வை மேற்கொண்டு பொன்றாப்புகழை யெய்தி, அப்புகழாகிய ஆலவிருட்சத்தை விழவொட்டாது தாங்க விழுது போன்ற நன்மக்களை மனைவியிடம் உண்டாக்கி எழுமைக்கும் இன்பம் தேடவேண்டும். குலத்தை அபிவிருத்திசெய்து பிதிர்,

விருந்து,தெய்வம்,சுற்றம் முதலியவர்களுண்டி யுகுந்து கொடுத்து இன்றுபோல் என்றும் நீங்கா நிழல் போலிருந்து நலம்புரிபவள் தருமபத்தினியேயாம். மனைவியிடம் உண்டாகிய மைந்தனே பிற்காலத்தில் நீர்க்கடன் செய்து தனக்கு உயர் கதியை நல்குவன். மனைவியுந்தானும் ஒருமித்திருந்து செய்த தருமமே ஒன்றுக்குக்கோடியாகப்பலன்தரும். மனைவியுடன் திருத்தலயாத்திரை புறப்பட்டவன் ஏறுபோல் பீடுநடையுடன் சென்று சேவித்து சங்கல்ப ஸ்நானம் முதலிய புண்ணிய கருமங்களைச் செய்து பிதிர்களுக்கு பிண்டங்கொடுத்து புனிதமுறுவான்.

BESANT

எனவே மனைவியிடத்து சிறு குற்றங்களிருக்கினும் உமியை நீக்கி அரிசியைக் கொள்வதுபோல், குற்றத்தை நீக்கி அவளைத்திருத்தி நல்வழிப்படுத்தி வாழவேண்டும். குற்றமுடையவள் என்று வெறுத்துவிட்டால் அவள்எவ்வாறு குணப்படுவாள் தன்னைவெறுக்குங் கணவனைப்பல நாள்வரைப் பொறுத்துப் பார்த்து பிறகு பிறரிடம் நிந்திக்க ஆரம்பிக்கின்றாள். மேலும் மேலும் வெறுப்பே வேரூன்றி விடுகின்றது. ஆதலால் கணவனும் மனைவியும் வெறுப்பின்றி விருப்புற்று ஈருடம்பிற்கு ஒருயிரென வாழவேண்டும். இல்லற மென்பது ஒரு இரட்டை மாட்டுவண்டி; அதில்தருமமென்னும் உயர்ந்தபண்டத்தை ஏற்றியிருக்கிறது. கருமம் என்னும் நுகத்துடன் கூடியது. கணவன் மனைவி என்னும் இருவரும் ஒத்த மனத்தினராயிழுக்கில் பரகதியென்னும் பேரின்ப உலகில் அது நம்மைச்சேர்க்கும். மாறுபட்டு இழுத்தால் அவ்வண்டி ஒரு கணப்பொழுதும் ஓடாது இருவரும் வேற்றுமையுறில் அவ்வண்டியிலுள்ள அன்பு என்னும் அச்சு வண்டி வீழ்ந்து பண்டங்கள் சிதறிப் பாழ்படும்.

தருமமெனும் பண்டமிடு சகடமா மனைவாழ்க்கை
கருமநுகம் பிணித்துமனைக் காதலியுந் தானுமென
இருவராய் முறைசெலுத்தி னெத்துணை தூரஞ் செல்லும்
ஒருவராய்ப் பூண்டிழுப்பி னோரிறையுஞ் செல்லாதால்

---திருக்குற்றாலபுராணம்.

---(தொடரும்)

314

உ

ஓம் குஹாயநம:

திருநீற்று மகிமை

ஜி. வேலாயுதம், உபாத்தியாயர், தலைக்குளம்.

(289-வது பக்கத் தொடர்ச்சி).

தனவான் ஒருவனுக்கு நாம் விரோதமாயிருப்பின் நமக்கு தனவானால் நேரிடும் துன்பத்திற்கு அளவில்லை; ஓர்நாட்டி லிருந்து கொண்டு அந்நாட்டு அரசனுக்கு மாறாகநின்றால் அவன் ராஜதுரோகி என்று குற்றம் சாட்டப்பட்டு பிறநாட்டிற்கு துரத் தப்படுகிறதை நாம் பார்த்திருக்கிறோம். இவ்விதமான செய்தி களையெல்லாம் அறிந்தும் எல்லாவற்றிற்கும் தலைவனும் தயாபர னுக்கு விரோதமாய் நிற்கும் மாய்கையுடன் சேர்ந்துலாவுகின் றோமே! நமக்கு என்னென்ன வந்துறுமோ தெரிகிறதில்லையே.

நின்மலனுக்குறிய வெண்ணீற்றை, மும்மலனுக்குரிய சந் தனத்தால் மறைத்தல் எது போல இருக்கிறது என சற்று கவனியுங்கள்.

மெய்யன்புடையீர்!

நந்தனார் சிவபிரானைத்தரிசனம் செய்ய திருப்புன்கூர் செல்ல வும் அங்கே நின்ற நந்தியம்பெருமான், எம்பெருமானை மறைத்த தைப் போன்று, மானிடர்களின் கண்ணிற்கு சிவம் தென்படாத படி மாய்கை மறைத்திருப்பதைப் போன்றுமிருக்கிறது.

சிற்சில பொழுது சந்தனத்தினூடே வெண்ணீறு பிரகா சித்தல் எதுபோல இருக்கிறது என்றால் சர்வசக்தியாம் எம்பி ரான் மானிடர்க்கு காக்ஷி கொடுப்பான் வேண்டி சிற்சிலவிடங் களில் சிற்சில காலங்களில் மாய்கையெனும்பிசாசைநீக்கி வெளிப் படுகிறார் என்பதனை காட்டுகிறதன்றோ?

மேய்யன்பர்களே !

தற்காலம்திருநீற்றின்மகிமை நசிந்துவிட்டதோஎன்றெண்ணி விடாதீர்கள், அதன்பெருமையை எனதனுபவத்தினுல் சற்று விளக்குகின்றேன் கவனியுங்கள்.

சற்றேறக்குறைய மூன்றுவருடதிற்குமுன் எனக்குஓர்பெரும்வியாதி பிடித்ததுண்டு; அநேகவைத்தியர்களை நாடிச் சென்று பலமருந்துண்டதுண்டு; ஆனுல்பிணியோ என்னை இறுகத்தழுவிக் கொண்டேஇருந்தது. அப்படியிருக்க ஓர்நாள் திருஞானசம்பந்தருடைய புனிதசரித்திரத்தைப் படித்துக்கொண்டேவர "பாண்டியனுக்கு வெப்பு நோயையகற்றியது வெண்ணீறு" என்பதைக் கண்டு "எனக்கும் மருந்தாகுமோ" எனும் குரல் என்னை யறியாமலே வெளிவரவும் பயபக்தியுடனே செவ்வேட் பரமனை மனமார வாழ்த்தி இருகைகூப்பி அவரது நாமத்தை நாவாரக்கூறி வெண்ணீறெடுத்து வாயிலிட்டும் ; உடம்பிலே நீர்வடியும் புண்களிலுமிட்டேன்.

இவ்விதமாக மூன்றுநாட்கள் மருந்தாக உண்டேன். நான்காம்நாள் மாய்ந்து போகும் அறிகுறியைக் காட்டிற்று. பத்தாம் நாள் பொருக்குகள் பூமியில் விழஆரம்பித்தன; அன்றுமுதல் அப்பிணி கதிரைக் கண்ட பனிபோற் பரந்தன என்றுறுதியாக சிரமேல்கைகுவித்து முருகனை தொழுதே கூறுகின்றேன் இச்செய்தியால் தற்காலமும் திருநீற்றின் மகிமையுண்டென உண்மையாய்க் கொள்ளுங்கள்.

ஒருவன் நல்லவனேடு பழகுவதனுல்நல்லசெய்கை தோன்றுவதுபோல் ஒருவனது இருதயம் களங்கமின்றியிருக்க உன்னினுல் களங்கமில்லா வெண்ணீற்றை எப்போதும் உபயோகிக்க வேண்டும் இவ்விதமாய் களங்கமிலா மனத்துடனிருக்க காட்டிய இறைவனது அன்பே அன்பு.

மெய்யன்புடையீர் !

இச்சிறு உரையில் யாதாவது குற்றங்குறைகளுண்டாயிருப்பின் பொறுத்துக்கொண்டு ; பாழன நெற்றியாக இல்லாம

316

உ

ஓம் குஹாய நம :

குமரகுருபர ஸ்வாமிகள்

சரித்திரம்.

எ. எம். நாராயணசாமி ஐயர், மதுரை.

(258-ம் பக்கத் தொடர்ச்சி.)

குமரகுருபரரது பக்தியையும் அடக்கத்தையும் கண்ட ஞானாசிரியரும் அவர்பால் அன்புமிகக் கொண்டார். ஆயினும் அடிகள் அறிவுரை பெறுவதில் கொண்டுள்ள ஆர்வத்தின் அளவை அளப்பான் வேண்டி, "அன்ப! அறிவுரை பெறவிரும்பும் நீ காசி சென்று கறைமிடற் றண்ணலின் தரிசனம் கண்டு புனிதப் புனலாடி வருவாயாக; அப்பால் உனக்கு அறிவுரை செய்வோம்" எனப்பணித்தார்.

விருக்கவும் நுதலினிடத்தே பரிசுத்த நீருகிய வெண்ணீற்றை பிரகாசிக்கச் செய்யுங்கள்.

இதற்காக கிருபைக்கும், ஆனந்தத்திற்கும் கடல் போன்று எக்காலமும் விளங்காநிற்கும் செவ்வேட் பரமன் திருவருள் புரிவாராக. "நீறணி நெற்றிவாழ்க."

குறிப்பு :---திருநீறு அணியாது தனியாக சந்தனத்தை மட்டும் அணியும் செயல் நெறியற்றதென்பது இக்கட்டுரையின் கருத்து.

ஆசிரியர்.

கடலிடை வீழ்ந்தோனுக்குக் கிடைத்த தெப்பம் திரும்பவும் தவறியது போல் வருந்தி, ஞானசிரியரின் திருவடித்தாமரைகளில் விழுந்துபணிந்தவராய், ''அடியேனை ஆட்கொள்ள இசைந்த அருட் கடலே! காசியோ வெகுதூரத்திற் கப்பால் உள்ளது; யாக்கையோ நீர்மேற் குமிழி ; நாளையென்பது நமனுடைய நாள் ; நன்றேயும் இன்றே-இன்னே செய்யவேண்டும். ஆதலால், அருள்புரிந்து அடிமையை விரைவில் ஆட்கொள்ள வேண்டு'' மென்று வேண்டினார்.

அவருடைய ஆர்வத்தின் பெருக்கைக்கண்ட ஆசிரியர் கருணை கொண்டு "அன்ப! அஞ்சற்க. தெரிசிக்க முத்தியை வழங்கும் தில்லையிற் சென்று 40. நாள் தங்கி இருந்துவருதி ; பதஞ்சலிக்கும் புலிக்கால் முனிக்கும் நிருத்த கோலங் காட்டிய அற்புதத் தலம் அது. இருதயபுண்டரீக க்ஷேத்திரம்; தில்லை சேவித்தார்களுக்கு எல்லைக்கப்பாலோடும் பிறவித்துன்பம். ஆங்கு சிற்சபையில் சிவகாம சுந்தரியுடன் அனவரத ஆனந்தத் தாண்டவத்தை ஐயன் ஓவாது புரிந்தருளுகின்றான். அங்குசென்று நின்வாக்குதடைபட்ட "ஐந்து பேரறிவும்'' என்றதிருச்செய்யுளின் உண்மையை அனுபவத்தினா லறிக. நின்னால் பல அருஞ்செயல்கள் நடக்க இருக்கின்றன. செல்லுதி'' என்று அருள்பாலித்தனர்.

குமரகுருபரர் மறுமொழி கூறாது, பன்முறைபணிந்து விடை பெற்றுப் புறப்பட்டுத்தில்லையை நோக்கிச் செல்வாராயினர். வழி யில் எதிர்ப்பட்ட புள்ளிருக்கும் வேளூரில் வைத்திய நாதரையும் தையல் நாயகியையும் முத்துக்குமாரரையும் வணங்கிநின்றார்.

அவ்வமயம் சைவ மணம்கமழும் பாமாலையாம் கந்தர்கலி வெண்பாவை செந்திலம் பதியில் சூடிக்களித்த பாதமலர் மீதில் போதமலர் தூவிப் பாடுமவர் தோழத்தம்பிரான் மற்றுமோர் பாமாலையைச் சூட்டிக்கொள்வான் வேண்டி, முன்னம் குமரகுரு பரர் முன்பு செந்திலம் பதியில் தோன்றியது போலவே அர்ச்சகர் வடிவுதாங்கி அருட்கவி வாணர் முன்தோன்றி, பிறப்பு இறப்புப்பிணிகள் யாவற்றையும் போக்கவல்ல திருநீற்றை அவ ருக்கு அளித்து, "சைவம் தாணியில் தழைக்கத் தோன்றிய செல்வா! மதுரையம்பதியில் நீ, நமது அன்னையாருக்கு சூட்டிய

பிள்ளைத்தமிழாம் பாமாலையின் பரிமணத்தால் பரவசமடைந்து அன்னையாரே உனக்கு முத்தாரம் இட்டனள் அன்றோ ? ஆத லின் அத்தகைய பாமாலையை ஈண்டெழுந் தருளியுள்ள முத்துக் குமாரசுவாமிக்கும் சூட்டுவாயாக ; உனது பாமாலையைச் சூடி அநேகநாட்களாயின,'' எனக்கூறி திருஉருக்கரந்தார். உடனே குமரகுருபரர் அந்தோ ! அடியேனைவலிய வந்தாட்கொள்ளும் வடிவேற்கடவுளே ! தேவரீர் அடியேன்முன் இருமுறை அர்ச்சகர் வடிவாய்த் தோன்றியும் தம்மை அறியாது போயினேன் ; என்னே! ஏழையினேன் புன்மதியிருந்த வாறு? ஓலமறை களறைகின்ற தேவரீரை எவ்வாறு யான் புகழவல்லேன்'' என்று திகைக்க, "பொன்பூத்த'' என்ற சொல்வானில் எழுந்தது. அத் தெய்வமொழியை முதலாகக் கொண்டு சொல்லழகு பொருளழகு செறிய, மொழிக்கு மொழி மதுரமாக, மிகவும் உயரிய ஒரு பிள்ளைத்தமிழைப்பாடி முத்துக்குமாரர் பன்னிருபுயத்தில் சூட்டி னார்.

பின்னர் அருட்கவிவாணர் அவ்வூரில் சிலபகல் தங்கி அவ ணின்றும்போந்து சின்மயவியோமரூபமாய் என்றும் திகழ்த லாலே நன்மை சால் சிதம்பரப்பேர் நண்ணிடும் தில்லையம்பதியை அடைந்தார். அடியார் பலர் அருட்கவி வாணரை எதிர்கொண்டு வரவேற்றனர். அன்பர்கள் பலரும் சூழ அருட்கவிவாணர் ஆலயம் சென்று ஆங்கு,திரிபுரம் எரிய வேழசிலைமதனெரிய மூரல் திருவிழியருள் மெயஞ்ஞான குருநாதன், "ஓதமொய்ச்சடையாட உற்றமர்மான் மழுக்கரமாட பொற்கழலோசை பெற்றிட நடித்த'' குஞ்சிதபாதரை "ஒப்பில் சீர்தில்லை யின்கண் ஓங்கு இஞ்ஞான மன்றத்தெப்பொழுதும் இவ்வண்ண மிணையிலானந்தக் கூத்தை இப்புவி அண்டம் உய்ய எம்பிரான் ஆடல்வேண்டும்'' என்று வியாக்ரபாதர் வேண்ட அவரது வேண்டுகோட்கிணங்கி, "அன்ப ! கலக்கமின் ஞான யோகக் கண்ணினர்காட்சிக் கன்றிப் புலப்படா நடனம் நீவிர்கண்டிடப்புரிந்து யாம் பொல்லாமலக்குறும் பெறிந்தீர், உங்கள் பொருட்டு இந்தஞானமன்றில் உவப்பில்லா ஆனந்த ஆடல் ஒழியாது புரிதும்'' எனக்கூறி அவ்வண்ணமே என்றும் மூவுலகத்துளாரும் மொழிந்திடத் திகழ்ந்து மூந்தும்

பொன்னம்பலத்தில் புவனங்கள் யாவும் உய்வான் வேண்டி ஆனந்தத் தாண்டவம் ஆடும் நடராஜப்பெருமானைக் கண்டார்.

அளவற்ற பிறப்பிறப்பிற்குக் காரணமாயுள்ள முடிவில்லா மஹாமாயை ஆகிய முயலகனை ஒருகாலால் மிதித்துக் கொண்டும் மற்றொரு பாதத்தை ஜாக்ர சொப்பன சுழுத்தி யாகிற மூன்று அவஸ்தைகளுக்கும் மேற்பட்டதாயுள்ள துரியாவஸ்தையைக் காட்டுவதற்காக உயர்த்திக்கொண்டுமிருக்கும் ஆனந்தக்கூத்தனைப் பணிந்து, காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி, "தில்லை நாயகனே போற்றி, சிவபரஞ்சுடரே போற்றி, எல்லையிலானே போற்றி இன்பநாயகனே போற்றி, அன்பில்லாத அடியேனை யாண்டு கொள்ளவேண்டும், வெறுப்புடன் உண்ணினும் விருப் புடன் உண்ணினும் மருந்து பயன் தருவதுபோல் அன்பின்றி வணங்கும் அடிமையைக் காத்தருள்வீர். மேருவைச்சார்ந்த பொன்னிறப்புறவும் கருநிறக்காக்கையும் ஒருநிறமடைவதுபோல் அன்பும் அறிவுமற்ற அடியேன்உம்மை தெரிசித்ததால் அன்பறி வுடைய அடியரில் ஒருவனானேன். நீங்காது தொடர்ந்த ஆணவ நங்கை என்னும் பாத்தையைப் புணர்ந்து அவளோடு பிணிப் புற்ற என்தன்மையை உணராது அவளின் நீங்காது நீங்கினவன் போல நினைந்து மோகத்தில் அழுந்திக் கலந்திருக்கும்போது அவளது தங்கை இருவருள் குடிலையாகிய சுத்தமாயை என்பாள் சிவதத்துவம், சக்திதத்துவம், சதாசிவதத்துவம்,ஈஸ்வரதத்துவம் சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களாகிய புதல்வியர்களைப் பெற்றனள். மோகினியாகிய அசுத்தமாயை, காலம், நியதி, கலை, என்ற மூவரைப் பெற்றனள், அம்மூவருட் கலை என்பவள்வித்தை, இராகம், மாயை என்று வேறு மூவரைப்பெற்றனள்; அம்மூவருள் மாயை என்பவள் கரணம் நான்கு, அறிவு பொறி ஐந்து, வினைப் பொறி ஐந்து, பூத நுட்பமாகிய தன்மாத்திரை ஐந்து, பூதம் ஐந்து ஆகிய இருபத்தி நான்கு தத்துவங்களாகிய புதல்வியர்களை ஈன்றனள். இங்ஙனம் தோன்றிய முப்பத்தைவரையும் காமக் கிழத்தியாகக்கொண்டு அளவில்லாத காலம் அவர்களோடு கலந்திருந்தபொழுது, இங்ஙனம் முறைதவறி இவரோடு சேர் தலை ஒழிக வென்று அறிஞர் உணர்த்தினர். அப்போது அஞ்சி ஐயனே! நின்பால் அடைந்தேன்; எனக்குத் தாங்கள் ஞானக்

கொடியை மணம்புரிவித்து நீங்காத அன்பு என்னும் பொருள் கொடுத்து இறவாமை என்னும் வீட்டினில் இருத்திக் குறையாத செல்வமுடைய அடியாரோடு இனிது கூட்டியருளுவீராக'' என வேண்டி அம்பலத்தாடுவான் மலர்சிலம்படிகட்கு சிதம்பரமும் மணிக்கோவை யாம் பாமாலையைச் சாத்திப் பேரானந்தக்கடலில் மூழ்கினர். அவ்வூரில் ஆசான் இட்ட ஆணைப்படி நாற்பது நாட்கள் முக்காலம் முறைதவருது முதல்வனை தரிசித்துவந்தார்

அடிகள் நாடோறும் திருவாலயம் செல்லும்வழியில் பெரிய புராணப்பிரசங்கம் ஒருவர் புரிவார். அடிகளைக் கண்டவுடன் ஆங்குள்ளார் அனைவரும் எழுந்து வணங்குவர். பிரசங்கம் புரியும் பெரியார் வணங்குவதில்லை. சிலர் பெரியாரை நோக்கி "செந்திலாதிபன் திருவருள் பெற்ற குமரகுருபரரை நீர் மதியாத தென்னை ?'' என்று வினவ. அவர், "குமரகுருபரர் இலக்கண ஞானமில்லாதவர் ; அருளால் பாடுபவர் ; அதனல் அவரையான் வணங்கிலேன்'' என்ன, அதனைக்கேட்ட அவர்கள் அடிகள்பால் கூறிவேண்ட, அடிகள் அவருக்கு அறிவு புகட்டுவான்கருதி, இலக்கணச்சிறப்புடைய சிதம்பர செய்யுட்கோவையைப் பாடினர். அதன் அருமையை யுணர்ந்து பிரசங்கியார் அச்சங்கொண்டு அடிகளைப் பணிந்து மன்னிப்பு கேட்டுக்கொண்டு சிடரானர். பின்னர் அடிகள் சிவகாமி இரட்டைமணிமாலையைப் பாடியருளினர். 40-நாள் கடந்து குருமொழிப்படி தில்லையம்பதி மேவும் அல்லுறழ் கண்டரிடம் விடைபெற்று தருமபுரத்தை அடைந்தார்.

குருமூர்த்தியை யண்மி தாயைக் கண்ட சேய்போல் பன்முறைபணிந்து, "குருநாதா ! நின்கட்டளையை நிறைவேற்றினேன். இனி அடியேன் மனமாசகல மெய்ஞ்ஞானத்தை உபதேசித்தருள்புரிவீர்.'' என்று வேண்டி பண்டாரமும்மணிக்கோவை, பாடி குருவினுடைய தாள்மலரில் சூட்டினர்.

ஞானசிரியர் மகிழ்ந்து குமரகுருபரருக்கு பஞ்சாக்கரத்தை உபதேசித்து மீனம்பிகையுடன் சொக்கலிங்கத்தை வழிபட எழுந்தருளச் செய்துகொடுத்து, ஐயங்களை நீக்கியருளினர் குமரகுருபரர் ஆசிரியரை வழிபட்டுக் கொண்டிருந்தார். பரிபக்குவமடைந்த அடிகள் ஒருநாள் திருமலை நாய்க்கன் தந்த பற்பல

உ

பொங்கல்விழா

ஆர். குப்புசாமி நாயுடு. மேகானூர்

பொங்கல் பொங்குக! பொங்கல் பொங்குக!
எங்கும் சிவமார்ந் தின்பம் தங்குக
செழுமுகின் மேகந் திசையெலாம் பொழிந்து
உழவரின் செல்வக் கொழுமுனை யோங்குக
ஏரும் ஏரியும் எழிலுடன் பொங்குக
சீருந் திருவும் சிறந்து பொங்குக
பண்ணை பொங்குக பசுங்கதிர் பொங்குக
எண்ணும் எழுத்தும் எங்கும் பொங்குக
கைத்தொழில் பொங்குக கனகம் பொங்குக
மெய்த்தொழில் வாணிபம் மேவிப் பொங்குக
அன்பு பொங்குக அருளும் பொங்குக
இன்பப் பாலே எங்கும் பொங்குக
பொங்குக திருப்புகழமிர்தம் பொங்குக
பொங்குக செந்தமிழ் மங்களம் தங்குக.

பரிசுகளையும் செம்பொன்மணிகளையும் குருதக்கிணையாகத் தந்து ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினர். ஆசிரியர் "அன்ப! இவைகளைக் கொண்டு போய் காசியில் இதுபோல் ஒருதிருமடத்தை நிறுவி சைவப்பயிரைத் தழைக்கச் செய்வாய்; அதுவே நமக்கு தக்கிணையாம். பிறவிப்பயனும் அதுவே" என்று கட்டளையிட்டார். குருமொழியைச் சென்னிமேற் கொண்டு அப்பொருள்களை எடுத்துக்கொண்டு வேளூர், தில்லை முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு திருக்காஞ்சிக்கு வந்து ஆங்கு மதவெறி பிடித்து சிவநிந்தை செய்து உழலும் பிள்ளைப்பெருமாளையங்காருடன் வாதுபுரிந்து. சைவசமயமே மெய்ச்சமயமென நிலைநாட்டி, திருத்தணிகை, திருக்காளத்தி முதலிய திருத்தலங்களைச் சேவித்துக் கொண்டு காசியம்பதியை யடைந்தார்.

---(தொடரும்).

322



உ

அற்புதப்பத்திரிகை.

தோற்றுவாய்

அருட்பெருஞ்சோதி அற்புதக்கடவுளின் அருட்புதல்வரும், திருவருளே வடிவாகக் கொண்டு தோன்றியருளிய தெய்வக்குரவரும், சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை உலகம் உய்யும்பொருட்டு நிறுவிய சதாசிரியரும், ஐம்பூதங்களாலும் அழித்தற்கொண்ணாத பிரணவ தேகந்தாங்கி அற்புதத் திருவிளையாடல்களைச்செய்த அகண்டிதரும், கல்லும் கரையுமாறு கடவுளின் "திருவருட்பா" என்னும் தமிழ்மறையைத்திருவாய் மலர்ந்தருளிய பேரின்பப் பெருந்தகையினரும் ஆகியதிருவருட் பிரகாச வள்ளலார் சிதம்பரம் ஸ்ரீமத் இராமலிங்க சுவாமிகள் கருணையே வடிவாகக் கொண்ட கவினுடையார் என்பது யாவருக்கும் எக்காலத்தும் ஒப்பமுடிந்த உண்மை என்பது ஒருதலை.

இத்தகைய நமது வள்ளற்பெருமான் ஆன்மாக்கள் பொய்ந்நெறியினின்று நீங்கிமெய்ந்நெறியையுணர்ந்து அருட்பெருஞ்சோதியின் தண்ணருளைச்சார்தற் பொருட்டுப்பற்பல உபதேசப் பொன்மொழிகளைத் திருவாய்மலர்ந்தருளி யுள்ளார்கள்.

அவற்றுள் இந்த "அற்புதப் பத்திரிகை," சாலச்சிறந்ததென்பதை இதனை ஊன்றிப் படிப்போர்கள் உணராதிருக்க முடியாது. ஆதலால் இந்த அற்புதப்பத்திரிகையை அன்பர்கள் அனைவரும் படித்து உத்தரஞான சிதம்பரமாகிய வடலூருக்கு அடிக்கடிச் சென்று அருட்பெருஞ்ஜோதியரை அன்புடன் தரிசித்து அதனாலாய சித்திகளைப்பெற்று, துன்பம் நீங்கி இன்புற்று இனிது வாழவேண்டி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனை சிந்தித்து வந்திக்கின்றேன்.

வ. சு. உலகநாதன்,

"ஜோதிவிலாஸ்" 72-73, ஆண்டார் வீதி, திருச்சிராப்பள்ளி

323

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்ஜோதி

அற்புதப்பத்திரிகை.

அருட்பெருஞ்ஜோதி.

உலகத்தினிடத்தே பெறுதற்கு மிகவும் அருமையாகிய மனிதத்தேகத்தைப் பெற்ற நண்பர்களே !

அறிவுவந்தகாலமுதல், அறிந்து அறியாத அற்புத அறிவுகளையும், அடைந்து அறியாத அற்புதக் குணங்களையும், கேட்டு அறியாத அற்புதக்கேள்விகளையும், செய்து அறியாத அற்புதச்செயல்களையும், கண்டு அறியாத அற்புதக்காட்சிகளையும், அனுபவித்து அறியாத அற்புதஅனுபவங்களையும், இதுதருணந் தொடங்கிக் கிடைக்கப் பெறுகின்றேனென்று உணருகின்ற ஓர் சத்தியவுணர்ச்சியாற் பெருங்களிப்புடையேனாகி யிருக்கின்றேன்.

நீவிர்களும், அவ்வாறு பெற்றுப் பெருங்களிப்பு அடைதல் வேண்டுமென்று, எனக்குள்ளே நின்று, நிறைந்து எழுந்து வெளிப்பட்ட எனது சுத்த சன்மார்க்க லக்ஷியமாகிய, ஆன்மநேய வொருமைபாட்டு உரிமைப் பேராசை பற்றியே இதனைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையிற் றானேயுள்ளவராய் விளங்குகின்றவரென்றும், இரண்டுபடாத பூரண இன்பமானவரென்றும், எல்லா அண்டங்களையும், எல்லா உலகங்களையும், எல்லாப்பதங்களையும், எல்லாச்சத்திகளையும், எல்லாச்சத்தர்களையும், எல்லாக்கலைகளையும், எல்லாப் பொருள்களையும், எல்லாத்தத்துவங்களையும், எல்லாத்தத்துவிகளையும், எல்லாவுயிர்களையும், எல்லாச் செயல்களையும், எல்லா இச்சைகளையும், எல்லா ஞானங்களையும், எல்லாப்பயன்களையும், எல்லா அனுபவங்களையும், மற்றெல்லாவற்றையுந் தமது திருவருட் சத்தியால், தோற்றுவித்தல், வாழ்வித்தல், குற்றம் நீக்குவித்தல் பக்குவம்வருவித்தல், விளக்கஞ் செய்வித்தல், முதலிய பெருங்கருணைப் பெருந்தொழில்களை யியற்றுவிக்கின்றவரென்றும், எல்லாம் ஆனவரென்றும், ஒன்றும் அல்லாதவரென்றும், சர்வ காருணியரென்றும் சர்வ வல்லபரென்றும். எல்லாம்உடையராய்த் தமக்கு ஒருவாற்றானும் ஒப்புயர் வில்லாத தனிப் பெருந்தலைமை அருட்பெருஞ் ஜோதியர் என்றும், சத்திய அறிவால் அறியப்படுகின்ற உண்மைக்கடவுள்

ஒருவரே அகம்புறமுதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்த சுத்தமெய்யறிவென்னும் பூரணப்பொது வெளியில் அறிவார் அறியும் வண்ணங்களெல்லாமாகி விளங்குகின்ருர்.

அவ்வாறு விளங்குகின்ற ஒருவரே யாகிய கடவுளை, இவ்வுலகினிடத்தே ஜீவர்கள் அறிந்து அன்புசெய்து, அருளையடைந்து, அழிவில்லாத சத்திய சுக பூரணப் பெருவாழ்வைப் பெற்று வாழாமல், பலவேறு கற்பனைகளால் பல்வேறு சமயங்களிலும், பலவேறு மதங்களிலும், பலவேறு மார்க்கங்களிலும் பலவேறு லக்ஷியங்களைக் கொண்டு நெடுங்காலம் பிறந்து பிறந்து, அவத்தை வசத்தர்களாகிச் சிற்றறிவுமின்றி விரைந்து விரைந்து, பலவேறு ஆபத்துக்களினுல் துன்பத்தில் அழுந்தி இறந்திறந்து வீண்போகின்ருர்கள்.

இனி இச்சீவர்கள் விரைந்து விரைந்து, இறந்து இறந்து, வீண்போகாமல் உண்மையறிவு, உண்மையன்பு, உண்மை இரக்கம் முதலிய சுபகுணங்களைப் பெற்று, நற்செய்கையுடையவராய், எல்லாச் சமயங்களுக்கும், எல்லா மதங்களுக்கும், எல்லாமார்க்கங்களுக்கும், உண்மைப் பொதுநெறியாகி விளங்குஞ் சுத்த சன்மார்க்கத்தைப் பெற்றுப் பேரின்பசித்திப் பெருவாழ்வில் பெருஞ்சுகத்தையும் பெருங்களிப்பையும் அடைந்து வாழும்பொருட்டு, மேற்குறித்த உண்மைக் கடவுள், தாமே திருவுள்ளங்கொண்டு சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லக்ஷியமாகிய உண்மை விளக்கஞ் செய்கின்ற ஓர் ஞானசபையை இங்கே தமது திருவருட் சம்மதத்தாலியற்றுவித்து "இக்காலந்தொடங்கி அளவு குறிக்கப்படாத நெடுங்காலம், அளவு குறிக்கப்படாத அற்புத சித்திகளெல்லாம் விளங்க, யாமே அமர்ந்து விளையாடுகின்ருேம்." என்னும் திருக்குறிப்பை வெளிப்படுத்தி, அருட் பெருஞ்சோதியராய் வீற்றிருக்கின்ருர். ஆதலின் அடியிற்குறித்த தருணந் தொடங்கி வந்து வந்து, தரிசிக்கப் பெறுவீர்களாயின். கருதிய வண்ணம் பெற்றுக் களிப்படைவதும் அன்றி, இறந்தவர் உயிர்பெற்றெழுதல். மூப்பினர் இளமையைப்பெற்று நிற்றல், முதலிய பலவகை அற்புதங்களைக்கண்டு பெருங்களிப்பும் அடைவீர்கள்.

பிரஜோற்பத்தி-ஹு தைமீ
13-உ வியாழன் பௌர்ணமி
பூச நக்ஷத்திரம்
(25--1--1872).

இப்படிக்கு
இராமலிங்கம்